கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.125/2006

வாதியின்/பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு,P,பிரபு,இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் கோபாலகிருஷ்ணன்(வா.சா.2) | சாதி |
| த/பெ.க/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

**09.01.2023**

<u>*முதல் விசாரணை*</u>

1. நான் அருப்புக்கோட்டை நகர டவுண் சர்வேயேராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அழைப்பாணையில் கேட்கப்பட்டிருந்து ஆவணங்களின் அசலினை நகலுடன் எடுத்துவந்துள்ளேன். சர்வே எண்.105/2ன் புல வரைபடம் எடுத்துவந்துள்ளேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**i)** சர்வே எண்.105/2ன் புல வரைபடம் **சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ii)** சர்வே எண்.105/2ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் அ பதிவேடு நகல் எடுத்துவந்துள்ளேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு

குறியீடு செய்யப்படுகிறது. **அது சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**iii)** சர்வே எண்.106/2ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் அ பதிவேடு நகல் எடுத்துவந்துள்ளேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. **அது சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**iv)** சர்வே எண்.115/2ன் டவுண் சர்வே ரிஜிஸ்டர் அ பதிவேடு நகல் எடுத்துவந்துள்ளேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. **அது சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. வார்டு-டி, பிளாக்-2, டிஎஸ்எண். 105/2 சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எடுத்துவந்துள்ளேன் என்றால் எடுத்துவந்துள்ளேன். டிஎஸ்எண். 105/2 யார் பெயரில் உள்ளது என்றால் காரியதரிசி அருப்புக்கோட்டை நாடார் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட பொது டிரஸ்ட் என்ற பெயரில் உள்ளது. டிஎஸ் எண். 106/2 யார் பெயரில் உள்ளது என்றால் சுப்பையன் மகன் மாரியப்பன், சந்திவீரன் மக்கள் சந்திமுத்து, வேலு, சுப்பையன் மனைவி குருசாமி ஆகியோர்கள் பெயர்களில் உள்ளது.

2. டிஎஸ் எண். 106/1 யார் பெயரில் உள்ளது என்றால் சுப்பையன் மகன் மாரியப்பன் பெயரில் உள்ளது. டிஎஸ் எண். 115/1 யார் பெயரில் உள்ளது என்றால் சந்திவீரன் மக்கள் சந்திமுத்து, வேலுச்சாமி ஆகியோர்கள் பெயர்களில் உள்ளது. டிஎஸ் எண். 115/2 யார் பெயரில் உள்ளது என்றால் சுப்பையா மக்கள் குருசாமி மற்றும் செல்லையா, பெயரிலும், சந்திவீரன் மக்கள் சந்திமுத்து, வேலு, சுப்பையன் மகன் மாரியப்பன் ஆகியோர்கள் பெயர்களில் உள்ளது.

3. டிஎஸ் எண். 106/2 மற்றும் 115/2 இரண்டிலும் பூஸ்துதி பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூஸ்துதி பாதை என்பது மக்கள் நடமாட சென்றுவரும் பாதை என்றால் சரிதான். டவுண் சர்வே பிளான் எந்த வருடத்திற்குரியது என்றால் 1996ம் வருடத்திற்குரியது. அதன்முன்பு நடந்த சர்வேயில் பூஸ்துதி பாதையாக இருந்ததால்தான் 1996லும் பூஸ்துதி பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதன்முன்பு நடந்த சர்வே ஆவணம் என்கைவசம் இல்லை என்பதால் அது குறித்து சொல்ல இயலாது. தாவா சொத்தை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை.

4. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை பெற்ற பின்பு அழைப்பாணையில் கண்ட சொத்தினை பார்வையிடுவது வழக்கம் இல்லையா என்றால் நீதிமன்றத்தில் கோரியுள்ள ஆவணங்களை எடுத்துவந்துதான் சாட்சியம் அளிக்கிறேன். டிஎஸ் எண். 106/2 மற்றும் 115/2 இரண்டிலும் தற்போது பொதுமக்கள் பாதையாக புழங்கிவருவது குறித்து எங்களுக்கு எவ்வாறு தெரியும் என்றால் நேரில் சொத்தினை பார்வையிட்டால்தான் தெரியும்.

5. அதில் சாக்கடை வாய்க்கால் உள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. டிஎஸ் எண். 106/2 மற்றும் 115/2 இரண்டிற்கும் இடையே பொதுச்சந்து உள்ளதா என்றால் நீதிமன்றத்திலிருந்து ஆவணம் எடுத்துவரச்சொல்லியே அழைப்பாணை வந்தது. டிஎஸ் எண். 106/1 மற்றும் 106/2 இரண்டிற்கும் கிழக்கே தெரு உள்ளது என்றால் சரிதான். அதன் டிஎஸ் எண் என்ன என்றால் 98 அதன் பெயர் பொன்னுத் தெரு ஆகும்.டிஎஸ் எண். 106/1 மற்றும் 115/1 இரண்டிற்கும் வடக்கே என்ன உள்ளது என்றால் டிஎஸ்எண். 105/2, 105/3 உள்ளது.

6. அது யார் பெயரில் உள்ளது என்றால் காரியதரிசி அருப்புக்கோட்டை நாடார் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட பொது டிரஸ்ட்

என்ற பெயரில் உள்ளது. எங்கள் வரைபடத்தில் டிஎஸ்எண்.106/1, 115/1ற்கு வடக்கே கிழமேல் சந்து உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. டிஎஸ்எண்.106/1க்கு கிழக்கே உள்ள தெருவானது 1 மீட்டர் வடக்கே தெரு கூடுதலாக உள்ளது என்றால் அந்த இடத்தில்மட்டும் ஒருவளைவு உள்ளது. பூஸ்துதி பாதை என போடப்பட்டுள்ள இடத்தில் பட்டாவில் உள்ள அனைத்து நபர்களும் புழங்க உரிமையுள்ளது என்றால் சரிதான். அதில் எவரேனும் ஆக்கிரமிப்பு செய்தால் அது சட்டப்படி தவறு என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.